


**03.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் இரு அவைகளிலும் இன்று தொடங்கியது.

2. நாட்டில் அடுத்த 10 ஆண்டுகளில் புதிதாக 100 விமான நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் மத்திய அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

3. **NVS - 02** வழிகாட்டு செயற்கை கோளில் நேரிட்ட தொழில்நுட்ப கோளாறை சரிசெய்யும் முயற்சியில் இஸ்ரோ ஈடுபட்டுள்ளது.

4. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் ஓய்கிறது.

5. சென்னை ஓப்பன் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்று ஆட்டங்கள் இன்று பிற்பகல் தொடங்குகின்றன.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖

<u>நாடாளுமன்றம்</u>

குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் மக்களவையில் இன்று தொடங்கியது.

மக்களவையில் இந்த விவாதத்தை தொடங்கி பேசிய உறுப்பினர் திரு.ராம்வீர்சிங், திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசின் செயல்பாடுகளையும், மக்களுக்கான பல்வேறு நல திட்டங்களையும் எடுத்துரைத்தார்.

டெல்லியில் ஆயுஷ்மான் பாரத் காப்பீடு திட்டமும் பிரதமரின் வீட்டு வசதி திட்டமும் முறையாக செயல்படுத்தவில்லை என்று அவர் குறை கூறினார்.

இந்த விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாநிங்களவையில் இந்த விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய பி.ஜே.பி. உறுப்பினர் திரு. கிரண் சவுத்ரி, விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்க மத்திய அரசு மகத்தான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

எதிர்கட்சிகள் இதுகுறித்த தவறான தகவல்களை பரப்பி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாநிலங்களவையிலும் இந்த விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

ராம்மோகன் நாயுடு

உதான் விரிவாக்க திட்டத்தின் கீழ் அடுத்த 10 ஆண்டுகளில் நாட்டில் புதிதாக 100 விமான நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதிலளித்த அவர், நெய்டாவில் அமைந்துள்ள ஆசியாவின் மிகப்பெரிய சர்வதேச விமான நிலையத்திலிருந்து வரும் ஏப்ரல் மாதம் முதல் முறையான விமான போக்குவரத்து தொடங்கும் என்றார்.

உலகத்தின் முன்னோடி விமான போக்குவரத்து சந்தையை கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது என கூறிய அமைச்சர் 800 விமானங்கள் இந்திய விமான போக்குவரத்து துறையின் கீழ் செயல்படுவதாக கூறினார்.

விமான போக்குவரத்திற்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும்,

ஆண்டுதோறும் 600 விமானிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாகவும் கூறினார்.

நம்நாட்டில் 54 விமான போக்குவரத்து பயிற்சி அமைப்புகள் செயல்படுவதாக சுட்டிக்காட்டினார்.

தொழில்நுட்ப கோளாறுகளை குறைத்து பாதுகாப்பை அதிகரிக்க சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

2022-ம் ஆண்டு, 723 தொழில்நுட்ப கோளாறுகள் கண்டறியப்பட்ட நிலையில் சென்ற ஆண்டு இது 273 ஆக குறைந்துள்ளது என்றார்.

விமான போக்குவரத்து பிரிவில் மின்னணு சேவை ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாக கூறிய அமைச்சர் இதன்மூலம் விமான பயணிகள், விமான நிலையங்களில் காத்திருக்கும் நேரம் பெருமளவில் குறைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

எதிர்கட்சிகள் அமளி

மகா கும்பமேளா விவகாரத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று கோரி எதிர்கட்சிகள் நாடாளுமன்ற இரு அவைகளிலுமிருந்து இன்று வெளிநடப்பு செய்தன.

மக்களவை இன்று கூடியதும் இப்பிரச்சனையை எழுப்பிய எதிர்கட்சிகள் பிரயாக்ராஜில், மகா கும்பமேளாவில் நிர்வாக குறைபாடுகள் இருந்ததாக கூறி கோஷமிட்டன

இதற்கு பதிலளித்த மக்களவை தலைவர், குடியரசு தலைவர் தமது நாடாளுமன்ற உரையின் போது இவ்விவகாரம் பற்றி கூறியதை சுட்டிக்காட்டி, எதிர்கட்சிகள்

தங்களது கருத்தை குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது தெரிவிக்கலாம் என்றார்.

அவையின் மாண்பை பாதுகாக்கும் வகையில் எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஆனால் காங்கிரஸ், திமுக, சமாஜ்வாடி, திரிணமுல் காங்கிரஸ் கட்சிகள் அமளியில் ஈடுபட்டதோடு அவையிலிருந்து சிறிதுநேரம் வெளிநடப்பு செய்தன.

மாநிலங்களவையிலும் எதிர்கட்சி உறுப்பினர்கள் இப்பிரச்சனையை எழுப்பினார்கள்.

எதிர்கட்சிகள் இதுதொடர்பாக கொண்டுவந்த ஒத்திவைப்பு தீர்மானத்திற்கு அவைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் அனுமதி மறுத்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், சமாஜ்வாடி, உத்தவ் தாக்ரே தலைமையிலான சிவசேனா, ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இருப்பினும் அமளியின் ஊடே இன்றைய அலுவல்கள் மாநிலங்களவையில் எடுத்துக்கொள்ளபட்டன.

❖❖❖❖❖❖

இஸ்ரோ

இஸ்ரோ அண்மையில் விண்ணில் செலுத்திய **NVS - 02** வழிகாட்டு செயற்கை கோளில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கை கோளை அதன் சுற்றுப்பாதையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு உயர்த்தி, நிலை நிறுத்துவதற்கான பணிகளின் போது இந்த தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

இருப்பினும் கர்நாடகா ஹாசனில் அமைந்துள்ள தலைமை கட்டுப்பாட்டு மையத்திலிருந்து விஞ்ஞானிகள் தொடர்ந்து இந்த செயற்கைகோளை கண்காணித்து வருகின்றனர்.

செயற்கைகோளின் கருவிகள் நல்ல நிலையில் உள்ளதால், இந்த செயற்கைகோளை முன்னெடுத்துச் செல்வதற்கான மாற்று யுக்திகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இஸ்ரோ கூறியுள்ளது.

தற்போது இந்த செயற்கை கோள் நீள்வட்ட பாதையில் இயங்குவதாகவும், அதன் மின்உற்பத்தி இயல்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29-ம் தேதி **NVS 02** செயற்கை கோள் **GSLV F – 15** ராக்கெட் மூலம் புவி சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

<u>தேர்தல்</u>

டெல்லி சட்டப்பேரவைக்கு நாளைமறுநாள் நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்றுமாலை முடிவடைவதால் அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பி.ஜே.பி. மூத்த தலைவர்கள் திரு.ஜே.பி.நட்டா திரு.அமித்ஷா

காங்கிரஸ் கட்சியின் திருமதி. பிரியங்கா காந்தி ஆம்ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு.அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டோர் தேர்தல் பொதுக்கூட்டங்களில் பங்கேற்கின்றனர்.

70 உறுப்பினர்களை கொண்ட டெல்லி சட்டப்பேரவையில் 699 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இத்துடன் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி, உத்தரபிரதேசம் மாநிலம் மில்கிபூர் சட்டப்பேரவை இடைத் தேர்தலுக்கான பிரச்சாரமும் இன்று மாலையுடன் ஓய்கிறது.

இந்நிலையில் நாளைமறுநாள் காலை 7 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

தொலைக்காட்சி, வானொலி உள்ளிட்ட அனைத்து ஊடகங்களும் இதனைகட்டாயம் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தொகுதிகளில் வாக்குஎண்ணிக்கை வரும் சனிக்கிழமை நடைபெறும்.

❖❖❖❖❖❖

<u>அண்ணா நினைவு நாள்</u>

தமிழக முன்னாள் முதலமைச்சர் சி.என். அண்ணா துரையின் 56-வது நினைவுதினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், சென்னையில் உள்ள அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

முன்னதாக முதலமைச்சர் தலைமையில் அமைதி பேரணியும் நடைபெற்றது.

பேரறிஞர் அண்ணாவின் நினைவுதினத்தை ஒட்டி அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி வெளியிட்டுள்ள செய்தியில் அண்ணாவின் அறவழி பாதையில் பயணிக்க உறுதியேற்போம் என்று கூறினார்.

அண்ணாவின் பிறந்த ஊரான காஞ்சிபுரத்தில் உள்ள நினைவு இல்லத்தில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖

<u>மீனவர்கள்</u>

கச்சத்தீவு அருகே எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி ராமேஸ்வரம் மண்டபம் பகுதியை சேர்ந்த 10 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

தெற்குமன்னார் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இம்மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்டதுடன் அவர்களது ஒரு மீன்பிடி படகையும் இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்தனர்.

❖❖❖❖❖❖

தடை உத்தரவு

மதுரை மாவட்டத்தில் பொது அமைதியை பேணும் வகையில் இன்று காலை 6 மணி தொடங்கி நாளை நள்ளிரவு 12 மணிவரை 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.சங்கீதா தெரிவித்துள்ளார்.

போராட்டங்கள், கூட்டங்கள் மற்றும் தர்ணாக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

மீன்வளம்

தூத்துக்குடியில் நடைபெற்ற மீன்வள கண்காட்சியில் பல்வேறு கடல்வளம் மற்றும் கடல்சார்ந்த பொருட்கள் இடம்பெற்றிருந்ததாக மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலைய பொறுப்பு விஞ்ஞானி லவ்சன் எட்வார்டு தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

நாகை வாய்ஸ்

நாகை மாவட்டம் கோடியக்கரை கடற்பகுதியில் வனத்துறையினர் சேகரித்த அரியவகை ஆமை முட்டைகள் பொரிப்பகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

ரோஜா வாய்ஸ்

உதகை ரோஜா பூங்காவில் வரும் மே மாதம் நடைபெறவுள்ள 20-வது ரோஜா கண்காட்சிக்கான 32 ஆயிரம் ரோஜா செடிகள் கவாத்து பணிகள் இன்று தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

கோவில்

திருவையாறு அய்யாரப்பர் ஆலயம், கடலூர் சத்தியவாடி ஸ்ரீ ருக்மணி சமேத வேணுகோபால சுவாமி திருக்கோவில்,

தென்காசி பொருந்திநின்ற பெருமாள் திருக்கோவில்களின் மகா கும்பாபிஷேம் இன்று நடைபெற்றது.

…

நெல்லை மாவட்டம் உவரி அருள்மிகு சுயம்புலிங்க சுவாமி திருக்கோவில் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நாகராஜா திருக்கோவில்களில் தைபூச திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

❖❖❖❖❖❖

டென்னிஸ்

சென்னை **ATP** சேலஞ்சர்ஸ் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் பிரதான சுற்றுகள் நுங்கம்பாக்கத்தில் இன்று தொடங்குகின்றன

வரும் 9-ம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், முகுந்த் சசிகுமார், கரண்சிங் உட்பட 14 நாடுகளை சேர்ந்த போட்டியாளர்கள் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖